**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.</u>**

முன்னிலை : திரு.P.ஆசைமருது, பி,ஏ., எல்.எல்.பி.,

நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ), தேனி.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை.

**<u>C.C.No.100/2025</u>**

**<u>CNR No. TNTH020007742025</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் | : | CC. No.100/2025 |
| 2. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக,<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>பழனிசெட்டிபட்டி காவல் நிலையம்,<br>தேனி மாவட்டம். |
| 3. | குற்ற எண் மற்றும் சட்டப் பிரிவுகள் | : | குற்ற எண்.446/2024,<br>U/Sec. 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர் பெயர்கள், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | : | 1) கண்ணன் (வயது 29/2024)<br>த/பெ. ராசு (எ) கருப்பையா,<br>26, மாரியம்மன் கோவில் தெரு,<br>பத்ரகாளிபுரம்,<br><br>2) பத்திரகாளி (வயது 45/2024),<br>த/பெ. ராஜீ,<br>13, மாரியம்மன் கோவில் தெரு,<br>பத்ரகாளிபுரம்.<br><br>3) கிறுக்குமணி (எ) மணிமுத்து (வயது 67/2024),<br>த/பெ. கருப்பையா,<br>பிள்ளையார் போவில் தெரு,<br>பத்ரகாளிபுரம்.<br><br>4) சுப்பு (வயது 53/2024),<br>த/பெ. கிறுக்குமணி (எ) மணி,<br>207, தெற்கு தெரு,<br>பத்ரகாளிபுரம். |
| 5. | சம்பவ நாள் | : | 01.11.2024 |

| | | | |
|---|---|---|---|
| 6. | புகார் அளிக்கப்பட்ட நாள் | : | 02.11.2024 |
| 7. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | A1– 19.11.2024 (Anticipatory Bail)<br>A2– 19.11.2024 (Anticipatory Bail)<br>A3– 19.11.2024 (Anticipatory Bail)<br>A4– 19.11.2024 (Anticipatory Bail) |
| 8. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | A1– 19.11.2024 (Anticipatory Bail)<br>A2– 19.11.2024 (Anticipatory Bail)<br>A3– 19.11.2024 (Anticipatory Bail)<br>A4– 19.11.2024 (Anticipatory Bail) |
| 9. | எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | | 1 முதல் 4வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |
| 10. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது |
| 11. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| 12. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 16.12.2025 |
| 13. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 01.04.2026 |
| 14. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 10.04.2026 |
| 15. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் போதிய சாட்சிய, சான்று ஆவணங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |
| 16. | தீர்ப்பும் தண்டனையும் | : | (1) முடிவாக, அரசுத் தரப்பில், 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), |

| | | | |
|---|---|---|---|
| 17. | | | 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் போதிய சாட்சிய, சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, சட்டப்பிரிவு 271(1) BNS–ன் கீழ் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>2) இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை. |
| 17. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை. |
| 18. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை. |

இவ்வழக்கானது 24.02.2025–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுத் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சதீஸ்குமார், B.Com., L.L.B., அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் . . . . .

## <u>தீர்ப்புரை</u>

1) இவ்வழக்கின் புகார்தாரர் சுருளி, த/பெ சுப்புராஜ், என்பவர் பத்திரகாளிபுரம் பிள்ளையார் கோவில் தெருவில் அவரது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், கடந்த 01.11.2024ஆம் தேதி மதியம் புகார்தாரர் அவரது தோட்டத்திற்கு சென்று விட்டு வீட்டிற்கு வரும் வழியில் அவர்கள் ஊரை சேர்ந்த ராசு என்பவர் புகார்தாரரை பார்த்து

ஏலே கிறுக்கு பயலே எதுக்குடா எங்க வீட்டிலிருந்த தண்ணீர் டிரம் மூடியை எடுத்துக்கிட்டு போன என கேட்டதாகவும், அதற்கு புகார்தாரர் அவரிடம் எதுக்கு என்ன கிறுக்கன் என கூப்பிடுற என்னைய பார்த்தா உனக்கு கிறுக்கன் மாதிரி தெரியுதா என எச்சரித்து விட்டு புகார்தாரர் அவரது வீட்டிற்கு சென்றதாகவும், பிறகு புகார்தாரர் வீட்டில் இருந்தபோது 13.30 மணிக்கு 1 முதல் 4 வரையிலான எதிரிகள் உருட்டுக்கட்டை மற்றும் இரும்பு கம்பி போன்ற ஆயுதங்களுடன் புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து புகார்தாரரை பார்த்து ஏண்டா தேவிடியா மகனே களவாணி கூதி மகனே எங்க வீட்டுல இருந்த தண்ணீர் டிரம் மூடியை களவாடிட்டு போனதும் இல்லாம எங்க அப்பா கூட ஏண்டா பிரச்சனை பண்ணுன என்று அசிங்கமாக பேசி 1வது எதிரி வைத்திருந்த இரும்பு கம்பியால் புகார்தாரரின் தலை மற்றும் வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2 முதல் 4 எதிரிகள் வைத்திருந்த உருட்டு கட்டையால் புகார்தாரரின் உடம்பில் மாறிமாறி அடித்து சிறு காயத்தை ஏற்படுத்தியும் 1முதல் 4 வரையிலான எதிரிகள் போகும் போது அனைவரும் சேர்ந்து இரும்பு கம்பி மற்றும் உருட்டு கட்டையை காண்பித்து புகார்தாரரை பார்த்து இனிமேல் எங்க கூட பிரச்சனை பண்ணினால் உன்னை அடிச்சு கொண்ணு போட்டுருவோம்டா என கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்ததாக 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் பழனிசெட்டிபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடித்து, குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அவ்வாறே கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிரிகள் மீதான இறுதி அறிக்கை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொண்டபின் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, மேற்படி எதிரிகளுக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு மேற்படி எதிரிகள் குற்றம்

புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாகத் தோன்றியதால், 1 முதல் 4 வது எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, அவைகளைத் தமிழில் விளக்கியபோது, எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டுக்களை மறுத்தும் வழக்கு விசாரணை வேண்டினார்கள்.

3) எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் அரசுத் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அரசுத் தரப்பில், அ.சா.1 மற்றும் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அவர்கள்மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) <u>அரசுத் தரப்பின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத் தரப்பு சாட்சிய சுருக்கம் :–</u>

(i) அ.சா.1 திரு.சுருளி தனது சாட்சியத்தில், தான் தற்போது, பத்திரகாளிபுரத்தில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறதாகவும், ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், அவர்கள் தனது உறவினர்கள் ஆவார்கள் என்றும், தனக்கும், எதிரிகளுக்கும் இடையே கடந்த 2024–ஆம் ஆண்டு ஒரு சிறு தகராறு ஏற்பட்டதாகவும், தான் காவல் நிலையம் சென்று புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதில் தான் கைரேகை வைத்துள்ளதாகவும், வழக்கு நிலுவையிலிருந்தபோது, தானும், எதிரிகளும் சமாதானமாகிவிட்டதாகவும், **அந்த சமாதான மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டதாகவும்,** போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசுத் தரப்பில் பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.முருகேசன் தனது சாட்சியத்தில், தான் தற்போது, புதுக்கோட்டை மாவட்டம், வானக்கண்காட்டில் குடியிருந்துகொண்டு, ஓட்டுநராகப் பணிசெய்து வருகிறதாகவும், எதிரிகள் தன் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், தனக்கும், எதிரிகளுக்கும் இடையே கடந்த 2024–ஆம் ஆண்டு ஒரு சிறு தகராறு ஏற்பட்டதாகவும், தாங்கள் காவல் நிலையம் சென்று புகார் வாக்குமூலம்

கொடுத்ததாகவும், வழக்கு நிலுவையிலிருந்தபோது, தாங்களும், எதிரிகளும் சமாதானமாகிவிட்டதாகவும், **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டதாகவும்,** போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசுத் தரப்பில் பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

(ii) அ.சா.3 திரு. திருமூர்த்தி தனது சாட்சியத்தில், தான் தற்போது, பி.சி. பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறதாகவும், தங்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே பணிபுரிந்த சார்பு ஆய்வளார் திருமதி.மலரம்மாள் என்பவரது கையெழுத்து தனக்கு நன்கு பரிச்சயம் என்ற அடிப்படையிலும் வழக்குக் கோப்புக்களின் அடிப்படையிலும் தான் சாட்சியமளிக்கிறதாகவும், கடந்த 02.11.2024-ம் தேதி, சார்பு ஆய்வளார் திருமதி. மலரம்மாள் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, க.விலக்கு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சிகிச்சையில் இருந்த சுருளி என்பவரை விசாரித்து, அதன் தன்மைக்கு ஏற்ப, பி.சி. பட்டி காவல் நிலையக் குற்ற எண். 446/2024, சட்டப் பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS-ன் கீழ் வழக்குப் பதிவு செய்ததாகவும், **மேற்படி காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்பட்டதாகவும்,** பின்னர், 02.11.2024-ம் தேதியன்று மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று, சாட்சிகள் ராம்குமார் மற்றும் சொக்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்ததாகவும், **அவர் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்பட்டதாகவும்,** பின்னர், சம்பவயிட சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளையும் மற்றும் மகசர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், பின்னர், இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்குச் சிசிச்சை வழங்கிய மருத்துவர் திருமதி.வீரலட்சுமி அவர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவுசெய்து, காயச் சான்று பெற்றதாகவும், **அந்த காயச் சான்று அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்பட்டதாகவும்,** பின்னர், வழக்கின் சம்பவம் உண்மையெனத் தெரியவந்ததால், எதிரிகளைத் தேடிவந்தபோது, எதிரிகள் மாண்புமிகு

முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், தேனியில் முன்பிணை பெற்றுவிட்டபடியால், அவர்களை கைது செய்யவில்ல என்றும், அதன்பின்னர், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து, எதிரிகள்மீது சட்டப் பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறி சாட்சியம் சாட்சியமளித்துள்ளார்.

**இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.**

5) இவ்வழக்கின் எதிரிகளுக்குப் பாதகமாகத் தோன்றும் அரசு சாட்சியங்களை தொகுத்து கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் எனவும், தங்கள் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதன் பேரில், எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், **அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?** என்பதே ஆகும்.

**7) <u>தீர்வும் மற்றும் தீர்வுக்கான காரணங்களும்</u>:–**

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:**

(i) இருதரப்பு வாதுரைகளை கேட்டும் ஆவணங்களை பரிசீலித்தும் பார்த்ததில், இவ்வழக்கின் புகார்தாரர் சுருளி, த/பெ சுப்புராஜ், என்பவர் பத்திரகாளிபுரம் பிள்ளையார் கோவில் தெருவில் அவரது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், கடந்த 01.11.2024ஆம் தேதி மதியம் புகார்தாரர் அவரது தோட்டத்திற்கு சென்று விட்டு வீட்டிற்கு வரும் வழியில் அவர்கள் ஊரை சேர்ந்த ராசு என்பவர் புகார்தாரரை பார்த்து

ஏலே கிறுக்கு பயலே எதுக்குடா எங்க வீட்டிலிருந்த தண்ணீர் டிரம் மூடியை எடுத்துக்கிட்டு போன என கேட்டதாகவும், அதற்கு புகார்தாரர் அவரிடம் எதுக்கு என்ன கிறுக்கன் என கூப்பிடுற என்னைய பார்த்தா உனக்கு கிறுக்கன் மாதிரி தெரியுதா என எச்சரித்து விட்டு புகார்தாரர் அவரது வீட்டிற்கு சென்றதாகவும், பிறகு புகார்தாரர் வீட்டில் இருந்தபோது 13.30 மணிக்கு 1 முதல் 4 வரையிலான எதிரிகள் உருட்டுக்கட்டை மற்றும் இரும்பு கம்பி போன்ற ஆயுதங்களுடன் புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து புகார்தாரரை பார்த்து ஏண்டா தேவிடியா மகனே களவாணி கூதி மகனே எங்க வீட்டுல இருந்த தண்ணீர் டிரம் மூடியை களவாடிட்டு போனதும் இல்லாம எங்க அப்பா கூட ஏண்டா பிரச்சனை பண்ணுன என்று அசிங்கமாக பேசி 1வது எதிரி வைத்திருந்த இரும்பு கம்பியால் புகார்தாரரின் தலை மற்றும் வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2 முதல் 4 எதிரிகள் வைத்திருந்த உருட்டு கட்டையால் புகார்தாரரின் உடம்பில் மாறிமாறி அடித்து சிறு காயத்தை ஏற்படுத்தியும் 1முதல் 4 வரையிலான எதிரிகள் போகும் போது அனைவரும் சேர்ந்து இரும்பு கம்பி மற்றும் உருட்டு கட்டையை காண்பித்து புகார்தாரரை பார்த்து இனிமேல் எங்க கூட பிரச்சனை பண்ணினால் உன்னை அடிச்சு கொண்ணு போட்டுருவோம்டா என கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்தத ாக 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் பழனிசெட்டிபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடித்து, குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அவ்வாறே கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

(ii) எனினும், இவ்வழக்கில் புகார்தாரான அ.சா.1 தனது நீதிமன்ற விசாரணையில், தனக்கும் எதிரிகளுக்கும் இடையே கடந்த 2024 ஆம் வருடம் ஒரு சிறு தகராறு ஏற்பட்டதாகவும், தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(iii) அ.சா.2 தனது நீதிமன்ற விசாரணையில், தனக்கும் எதிரிகளுக்கும் இடையே கடந்த 2024 ஆம் வருடம் ஒரு சிறு தகராறு ஏற்பட்டதாகவும், தான் காவல்நிலையம்

சென்று புகார் வாக்குமூலம் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படியார்களின் சாட்சியம், சம்பவத்தின் உண்மை தன்மையையும், சம்பவத்தில் 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஈடுபட்டு, அசிங்கமாக பேசியது குறித்தோ, கொலை மிரட்டல் விடுத்தது குறித்தோ எடுத்துக்கூறி நிரூபிக்கும் விதத்தில் சாட்சியம் அமையவில்லை.

(iv) அ.சா.3 ஆக தற்போதைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி மேற்கொண்ட புலன்விசாரணை நடவடிக்கைகள் குறித்தும், புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், சாட்சிகளை விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வைமகஜர் தயார் செய்தது குறித்தும், காயம்பட்ட வாதிக்குச் சிகிச்சை வழங்கிய மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்று பெற்றது குறித்தும், குற்ற அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

8) மேற்கண்டவாறு, அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.1 மற்றும் எதிரிகளும் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானமாகிவிட்டதாகக் கூறி, BNSS பிரிவு 359(2)–ன் கீழ் மனுத் தாக்கல் செய்து, அம்மனு இந்நீதிமன்ற **Crl.M.P.No.834/2026–ஆக** கோப்பிற்கு எடுக்கப்பட்டதில், இவ்வழக்கின் குற்றப் பிரிவான 296(b) IPC சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால், அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில், முன்னிறுத்தப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசுத் தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ள நிலையில், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3–க்காக ஆவணங்களைப் பார்வையிட்டு சாட்சியம் அளித்த அ.சா.3–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து, அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) முடிவாக, அரசுத் தரப்பில், 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் போதிய சாட்சிய, சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்று

இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, சட்டப்பிரிவு 271(1) BNS–ன் கீழ் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

10) இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தப்பட்டு, 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.10 12:23:06 +0530

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**
**தேனி.**

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | – திரு.சுருளி | புகார்தாரர் (பிறழ்சாட்சி). |
| 2. | அ.சா.2 | – திரு.முருகேசன் | வாக்குமூலம் சாட்சி (பிறழ்சாட்சி) |
| 3. | அ.சா.3 | – திரு.திருமூர்த்தி | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>பி.சி.பட்டி காவல் நிலையம்,<br>தேனி மாவட்டம். |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | – | சமாதான மனு |
| 2. | அ.சா.ஆ.2 | – | புகார் மனு |

| | | | |
|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | – | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | – | பார்வை மகஜர் |
| 5. | அ.சா.ஆ.5 | – | மாதிரி வரைபடம் |
| 6. | அ.சா.ஆ.6 | – | காயச் சான்று |

**அரசுத் தரப்பு சான்றுப் பொருள்:** இல்லை.
**எதிரிகள் தரப்பு சாட்சி:** இல்லை.
**எதிரிகள் தரப்பு சான்றாவணம்**: இல்லை.
**எதிரிகள் தரப்பு சான்றுப் பொருள்**: இல்லை.

AASAY MARUDHU P
Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.10 12:23:16 +0530

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**
**தேனி.**

குறிப்பு:

1. வழக்கின் முடிவு காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்தார்கள்.
4. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.